மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2020-ம் வருடம் மே மாதம் 29-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.ப.சதீஷ்குமார்,பி.பார்ம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

<table>
<tr><td>1</td><td>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்:3336/து2/2020-16, நாள்:23.04.2020-ல் கொரோனா வைரஸ் (COVID-19) முன் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி சுகாதாரப்பிரிவின் மூலம் (DISINFECTION) கிருமிகள் நீக்கம் செய்வதற்கும் 1% HYPOCHLORITE and LYSOL பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணிகள் மற்றும் கிருமி நீக்கம் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பயன்படுத்துவதற்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கிட ரூ.10,00,000/- வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>பொருள்/விவரம்</td><td>எண்ணிக்கை/அளவு</td></tr>
<tr><td>1</td><td>கொரோனா கோட்டு (PPE)</td><td>100 Nos</td></tr>
<tr><td>2</td><td>N-95 Mask</td><td>100 Nos</td></tr>
<tr><td>3</td><td>ஒலிருட்டும் ஆடை துணியால் ஆனது ( Reflect Jocket)</td><td>500 Nos</td></tr>
<tr><td>4</td><td>பிளிச்சிங் பவுடர்</td><td>3000 Kg</td></tr>
<tr><td>5</td><td>நிர்த்த சுண்ணாம்பு</td><td>5000 Kg</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>1)மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2)2020-21-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து SDRF நிதி மற்றும் பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கிழ் (Door to Door Collection) வீடு வீடாக சென்று குப்பைப்பிரித்து வாங்க பயன்படுத்தப்படும் BOV வாகனத்தில் பழுதுகள் அதிகமாகி வாகனம் இயக்குவது சிரமம் ஏற்படுவதோடு வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதினால் மேற்படி பணி பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, மேற்படி BOV வாகனம் 10 எண்ணிக்கை பழுது நிவர்த்தி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.230000/-க்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1)மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2)அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப்பணி பாதிக்காமல் இருக்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தற்போது Tamil Nadu Transparency Tender Act-1998 நடைமுறையில் உள்ளதினால் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்:596/எச்1/2020)</td></tr>
</table>

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.